செ.வெ.எண். 163/2009(செமதொஅ) நாள் : 12.06.2009.

# உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் “வாழ்ந்து காட்டுவோம்” திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூரில் உள்ள பி.டி.என் திருமண மண்டபத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் துவக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு இத்திட்டத்தினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு உறுதிமொழியினை முன்மொழிய, அதனைத்தொடர்ந்து ஊராட்சி மன்றத்தலைவர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விழாச் சிறப்புரையாற்றியதாவது,

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் துவக்கப்பட்டுள்ளது பெருமைக்குரியது. தமிழக அரசு பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தில் பலர் அரசு வழங்கும் திட்டங்கள் மற்றும் சலுகைகளைப் பற்றி அறியாமல் உள்ளனர். அரசு திட்டங்களை பற்றி அனைவரும் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். கிராமப்புறங்களில் வசிக்கின்ற உடல் ஊனமுற்றோர், விதவைகள், வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் மக்கள், அனாதைகள் மற்றும் ஆதிவாசிகளின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்துவதற்காகவும், கிராமப்புறங்களில் வாழும் ஏழை மக்களின் வறுமையை நீக்கி அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தவும், கிராமப்புறங்களில் பின்தங்கியுள்ள சுயஉதவிக்குழுக்களை மேம்படுத்தவும், வாழ்வாதார திட்டங்களின் மூலம் பொருளாதார வசதியை ஏற்படுத்தவும் வாழ்ந்து காட்டுவோம் என்ற சிறப்பான திட்டம் துவக்கப்பட்டுள்ளது. முதன்முதலாக இத்திட்டம் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலும், பின்னர் மதுராந்தகம், அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியங்களிலும் தொடங்கப்பட்டன. நான்காவதாக உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் இன்று துவக்கி வைக்கப்படுகிறது. இதனை ஊராட்சி மன்றத் தலைவர் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் 73 ஊராட்சிகள் உள்ளன. இதன் தலைவர்கள் அனைவரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தினை பற்றி நன்கு அறிந்து கொண்டு தங்கள் பகுதியில் வாழும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள், உடல் ஊனமுற்றோர் மற்றும் விதவைகள் ஆகியோரை கண்டறிந்து இத்திட்டத்தினை சேர்த்து அவர்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைய முழுமுயற்சியை மேற்கொள்ள வேண்டும். அரசு வழங்குகின்ற சலுகைகள் அனைத்தும் ஏழை-எளிய மக்களுக்கு சென்றடைய ஊராட்சி மன்றத் தலைவர்கள் பாடுபட வேண்டும். எந்தவொரு திட்டமானாலும் அது வெற்றி அடைய வேண்டுமானால் ஊராட்சி மன்றத் தலைவர்களின் பங்குதான் முக்கியமானதாகும். சமீபத்தில் தமிழகத்திற்கு வருகை தந்த 13வது நிதிக்குழுவினர் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் பழந்தண்டலம் ஊராட்சியில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் செயல்பாடுகளை நேரில் கண்டறிந்து சிறப்பாக செயல்படுவதை பாராட்டினர். அதேபோல, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சி மன்றத்தலைவர்களும் தங்களது ஊராட்சியில் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட வேண்டும்.

தேசிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் என்ற புதிய திட்டம் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு முதன்முதலாக காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகின்றனர். அவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கப்பட்டு, அவர்கள் ரூ.30 ஆயிரம் வரை மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களில் 39 சதவீதத்தினர் தான் தேசிய மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்துள்ளனர். இது மிகவும் குறைவானதாகும். ஆகவே, ஊராட்சி மன்றத்தலைவர்கள் தங்களது பகுதியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களை கண்டறிந்து, அவர்களை இத்திட்டத்தில் சேர்த்து பயன்பெற செய்ய வேண்டும். இதுபோன்ற அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து ஊராட்சி மன்றத்தலைவர்கள் தெரிந்து கொண்டு ஏழை-எளிய மக்கள் பயன்பெற உதவிட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சுந்தர் அவர்கள் முன்னிலை வகித்து பேசியதாவது, வாழ்ந்து காட்டுவோம் திட்டம் கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக குன்றத்தூர், மதுராந்தகம், அச்சரப்பாக்கம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் ஏழை-எளிய மக்கள் பயன்பெறுவதற்காக துவங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமுதாயத்தில் ஏழை-எளிய மக்கள் பொருளாதார மேம்பாடு அடைய பாடுபட்டு வருகிறார். மத்திய-மாநில அரசுகள் தனிநபர் கடன் வழங்கி உதவி செய்து வருகிறது. தற்போது மக்கள் படிபடியாக பொருளாதாரத்தில் உயர்ந்து வருகிறார்கள். அனைத்து ஊராட்சிகளில் தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடனுதவிகள் வழங்கப்பட்டு, அவர்களும் பொருளாதாரத்தில் முன்னேறி வருகிறார்கள். அரசு திட்டங்கள் வெற்றிப்பெற அனைவரும் ஒற்றுமையாக செயல்பட வேண்டும். அப்போதுதான் அந்த திட்டம் வெற்றிப்பெறும். வாழ்ந்து காட்டுவோம் திட்டம் இந்த ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. ஊராட்சி மன்றத்தலைவர்கள் அனைவரும் ஒற்றுமையாக செயல்பட்டு இத்திட்டம் வெற்றிப்பெற பாடுபட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

முன்னதாக வாழ்ந்து காட்டுவோம் திட்ட மேலாளர் திரு.ராஜன்பாபு அனைவரையும் வரவேற்றார். உத்திரமேரூர் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.கு.துரைவேலு வாழ்த்துரை வழங்கினார். முடிவில் வாழ்ந்து காட்டுவோம் உதவி திட்ட மேலாளர் திரு.சுபான் நன்றி கூறினார். உத்திரமேரூர் வட்டாட்சியர் திருமதி.க.சாந்தா, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ரவிக்குமார் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். பின்னர் ஊராட்சி மன்றத்தலைவர்களுக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் குறித்து திட்ட மேலாளர் திரு. ராஜன்பாபு, மாநில வல்லுநர் செல்வி. நிருபாராணி, அமுதசுரபி சுய உதவிக்குழுவினர் ஆகியோர் விளக்கி கூறினார்கள்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.